DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.345 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.காமாட்சி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ. கோட்டைசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 18.02.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது உசிலனக்கோட்டையில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனது எனது கணவர்தான். 2 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் அவருக்கு சொந்தமான இருசக்கரவாகனத்தில் மணல்மேல் குடியில் கொட்டகை போடுவது சம்மந்தமாக காசு வாங்குவதற்காக சென்றிருந்தார். போகும் வழியில் விபத்து ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாக சொல்லி எனது ஊர்க்காரர்கள் எனது கணவரை ஏற்றிசென்ற ஆம்புலன்சில் என்னையும் திருவாடானை அரசு

மருததுவமனைக்கு கூட்டிசென்றார்கள். எனது கணவர் மீது கார் ஒன்று இடித்து விபத்து ஏற்பட்டதாக நான் கேள்விபட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா,.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்டி கையெழுத்தினை மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் என்னிடம் வாங்கினார்கள். எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் வாங்கினார்கள். விபத்து ஏற்படுத்திய நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.கடந்த 03.10.2023 தேதி எனது கணவர் வாகன விபத்தில் இறந்துபோனது சம்மந்தமாக விபத்து ஏற்படுத்திய நபர்மீது நடவடிக்கை எடுக்கும்படி மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்துவிட்டு தற்போது எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.